முருகப்பெருமான் துணை

**மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.08.2023**, செவ்வாய்கிழமை

1. மனபலம் உலகோர் கண்டிட
மார்க்கமாம் சன்மார்க்க வழி
ஞானமாக மக்களிடை அருளி
நம்பிக்கை வளர்க்கும் ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட சோபகிருது நள்ளி திங்கள்
இருபான்சூல திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 23 ம் நாள், 08.08.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசி
வழங்குவேன் புலிப்பாணிச் சித்தரும்
சோரமிலா ஞானப்படைகளாக
செகமெல்லாம் மக்கள் சிறக்க
4. சிறக்கவே அரங்க ஞானி
சித்தியாகத் தருகின்ற நல்
அறத்தின் பிடிகள் தன்னை
ஆக்கமுடன் அனைவரும் கைப்பற்றி
5. கைப்பற்றி வேலவா முருகா என
கட்டாயம் முழங்கி நின்று
தப்பிலா சன்மார்க்கம் தான்
தலையாய நெறியென ஏற்று
6. ஏற்று மக்கள் யாவரும் தொடர
இணைந்து வரமென அரங்கன்
ஆற்றல்மிக்க தருமம் வளர்க்க
அற்புதமான உலக மாற்றம்

7. மாற்றம் அரங்கனால் நடக்கும்
மரணம் வெல்லும் சக்தி
மாற்றமாக மக்களுக்குக் கிட்டும்
மனமுவந்து அரங்கன்வழி சரணடைய
8. சரணாகதி கண்ட மக்கள்
செகத்தால் இனி பிறவாத
அறமாக அரங்கன் துணைபட
ஆற்றல் கண்டு உயர்வர்
9. உயர்வைத் தரும் மாதவசி
உண்மைவழி காட்டும் ஞானி
தயவை பெற்ற மக்களுக்கு
தரணியில் இடர்கள் ஏதுமின்றி
10. ஏதுமின்றி ஞான வாழ்வு
எல்லாம் தெளிந்த வண்ணம்
பூதலத்தை காக்கும் மீட்கும்
புண்ணிய பலமுமாகக் கூடி
11. கூடியே குருவரங்கன் அவதார
குறையிலா நோக்கமாக உலகில்
நாடிடும் ஞானிகள் ஆட்சி
நாட்டிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—